### மடப்புரம் அஜித் குமார் கொலை வழக்கில்

# சி.பி.ஐ. விசாரணை முதல்வரின் நேர்மையைக் காட்டுகிறது!

### தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் கு.செல்வப்பெருந்தகை பேட்டி!



சிவகங்கை .ஜூலை. 6-

சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் மடப்புரத்தில் மடப்புரம் காளியம்மன்கோவில் காவலாளி அஜித்குமார் கடந்த 29ம்தேதி தங்க நகை திருட்டு வழக்கில் காவலர்களால் தாக்கப்பட்டதில் மரணம் அடைந்தார். அவரது மரணம் குறித்து பொதுமக்கள் எழுப்பிய பல்வேறு சந்தேகத்தின் அடிப்படையில் ஆறு காவலர்கள் சஸ்பெண்ட் செய்யப்பட்டு தற்பொழுது கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்கள். மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆஷிஸ்ராவத் கட்டாய காத்திருப்போர் பட்டியலில் வைக்கப்பட்டுள்ளார். மானாமதுரை டி.எஸ்.பி. சண்முகசுந் தரம் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளார். அஜித்குமார் வீட்டிற்கு பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள் வந்து ஆறுதல் தெரிவித்தவாறு உள்ளார்கள்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் மாலை தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் கு.செல்வப்பெருந்தகை அஜித் குமார் திருவுருவப் படத்திற்கு மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார். தாயார் மாலதி சகோதரர் நவீன் குமார் ஆகியோருக்கு ஆறுதல் கூறினார்.

பின்னர் செல்வப்பெருந்தகை செய்தியாளர்களிடம் கூறியதாவது.

நகை திருட்டு வழக்கில் அஜித்குமார் மீது காவலர்கள் நடத்திய கொலை வெறி தாக்குதல் கண்டனத்திற்குரியது . இது போன்ற சம்பவங்கள் இனி நடைபெற கூடாது. தமிழக முதல்வர்அவர்கள் இதில் தொடர்ச்சியாக நடவடிக்கை எடுத்து உள்ளார். சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தர விட்டுள்ளார் .இது வரவேற்கத்தக்கது. அ.தி.மு.க ஆட்சியில் சாத்தான்குளம் கொலைக்கு சி.பி .ஐ.விசாரணை கேட்ட பொழுது அதற்கு மறுத்தவர்கள் இப்பொழுது சி.பி .ஐ.விசாரணை குறித்து பேசுவதற்கே பயப்படுகிறார்கள். அஜித்குமார் மீது குற்றம் சாட்டப்பட்ட நிகிதா என்பவருக்கும் பா.ஜ.க. முன்னாள் தலைவர் ஒருவருக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதாக கூறப்படுகிறது. இது பற்றி சமூக ஊடகங்களில் பேஸ்புக்கில் ஏராளமான தகவல் வந்து கொண்டிருக்கின்றது.

எனவே நிகிதாவையும் போலீசார் நீதிமன்றமும் விசாரணைக்கு உட்படுத்த வேண்டும் அவரிடம் விசாரித்தால் பல்வேறு உண்மைகள் தெரிய வரும் .இந்த சம்பவத்தில் யார் ஈடுபட்டுள்ளார்கள் என்பது தெரிய வரும். இது குறித்து பொதுமக்களிடம் ஏராளமான சந்தேகங்கள் உள்ளது. காவல்துறையை தன் வசம் வைத்திருக்கும் முதல்வர்அவர்கள் இந்த பிரச்சினையில் உடனடியாக நடவடிக்கை எடுத்து சி.பி.ஐ. விசாரணைக்கு உத்திர விட்டதை காங்கிரஸ் கட்சி வரவேற்கிறது. மேலும் அவரது தாயார் வேண்டு கோளின் படி அவர்களுக்கு வீட்டுமனை பட்டாவும் அவர் சகோதரன் நவீன்குமாருக்கு காரைக்குடி ஆவின் நிலையத்தில் வேலை பணி நியமன உத்தரவு தந்தது வரவேற்கத்தக்கதாகும்.

அவர் திருப்புவனத்தில் இருந்து காரைக்குடி செல்வதற்கு அதிக நேரமாகும். இதனால் அருகில் உள்ள மதுரை ஆவின் நிலையத்திற்கு பணியினை மாற்றி தர வேண்டும் என்று கோரிக்கை வைத்துள்ளார் . இது குறித்து முதல் வரிடம் நேரில் சென்று வலியுறுத்த உள்ளேன். இந்த சம்பவத்தில் முதல்வர் அவர்களின் நடவடிக்கைகளை காங்கிரஸ் கட்சி முழுமனதாக வரவேற்கிறது .

இவ்வாறு செல்வப்பெருந்தகை கூறினார்.

அவருடன் மாநில செயலாளர் பச்சேரி சுந்தர்ராஜன், மாவட்ட காங்கிரஸ் தலைவர் சஞ்சய் காந்தி மற்றும் காங்கிரஸ் கட்சி நிர்வாகிகள் சென்று இருந்தார்கள்.

---

### கே.ஹெச்.குழுமத் தலைவர் – ஹாஜி மலாக் முகமது ஹாஷிம் சாஹிப் மறைவு!

# இராணிப்பேட்டை பகுதியில் - தோல் பதனிடும் தொழில் துறையின் பிதாமகராக விளங்கியவர்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

**சென்னை, ஜூலை 6 -**

**கே.ஹெச். குழுமத் தலைவரும் தென்னிந்திய தோல் பதனிடுவோர் மற்றும் முகவர்கள் பேரவையின் புரவலருமான ஜனாப் ஹாஜி மலாக் முகமது ஹாஷிம் சாஹிப் அவர்களின் மறைவையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட் டுள்ள இரங்கல் செய்தி வருமாறு:**

கே.ஹெச். குழுமத் தலைவரும் தென்னிந்திய தோல் பதனிடுவோர் மற்றும் முகவர்கள் பேரவையின் புரவலருமான ஜனாப் ஹாஜி மலாக் முகமது ஹாஷிம் சாஹிப் அவர்கள் மறைந்த செய்தியறிந்து வருத்தமுற்றேன்.

இராணிப்பேட்டை பகுதியில் தோல் பதனிடும் தொழில்துறையின் பிதாமகராக விளங்கி, பல பேருக்கு வேலை வாய்ப்பளித்து, இஸ்லாமிய மக்களிடையே பெரும் மரியாதை பெற்றுத் திகழ்ந்தவர் முகமது ஹாஷிம் சாகிபு அவர்கள்.

அன்னாரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும் மேல்விஷாரம் பகுதி மக்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அந்த இரங்கல் செய்தியில், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

---

### தென்காசி வடக்கு மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர்

# கிருஷ்ண லீலா புதல்வி ஜிந்தகி-அ.ஆல்ட்ரின் ஞானராஜ் திருமணம்!

### ராஜா ஈஸ்வரன் - ராணி ஸ்ரீ குமார்- ஹெலன் டேவிட்சன் -ச.தங்கவேலு சதன் திருமலைக்குமார்-எஸ்.தங்கப்பாண்டியன்-வி.பி.ராஜன் வாழ்த்துரை!



தென்காசி, ஜூலை 6-

தென்காசி வடக்கு மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர், சிவகிரி பேரூராட்சி உறுப்பினர் கிருஷ்ண லீலா எம். சீமான் கௌதம் ஆகியோரது மகள் எஸ்.ஜிந்தகி , திருச்சி மாவட்டம் முள்ளிப் பட்டி இறைவன் நகர் காவல் துறை சிறப்பு உதவி ஆய்வாளர் ஞா. அந்தோணி செல்வம்- அ.மரிய செல்வி, அ.ராதா ஆகியோரது மகன் அ.ஆல்ட்ரின் ஞானராஜ் ஆகியோரது திருமணம் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு நாளை (7.7.2025-திங்கள் கிழமை) காலை 9 மணிக்கு மேல் 10 மணிக்குள் சிவகிரி சி.எஸ்.ஐ தூய லூக்கா ஆலயத்தில் சிவகிரி சேகரத் தலைவர்,

சி.செல்வின் டேனியல் ராஜ், கூடன்குளம் சேகரத் தலைவர் எம்.பொன்ராபின் வினோ ஆகியோரது தலைமையில் நடைபெறுகிறது, அதன் பின் திருமண வரவேற்பு நிகழ்ச்சி சிவகிரி தேவர் மகா சபை திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது. தலைமைச் செயற்குழு உறுப்பினர் யு.எஸ்.டி.சீனிவாசன் தலைமை வகிக்கிறார். வாசுதேவ நல்லூர் வடக்கு ஒன்றிய செயலாளர், முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர் பொன்.முத்தையா பாண்டியன், மாநில மருத்துவர் அணி துணைச் செயலாளர் டாக்டர் செ.சு. செண்பக விநாயகம்,

வாசுதேவநல்லூர் தெற்கு ஒன்றிய செயலாளர் கோ.பூசைப்பாண்டியன், தென்காசி வடக்கு மாவட்ட துணைச் செயலாளர் வே.மனோகரன், இராய கிரி பேரூர் கழக செயலாளர் கே.டி.சி ச. குருசாமி, சிவகிரி பேரூராட்சி தலைவர் எஸ். கோமதி சங்கரி சுந்தரி வடிவேல், வாசுதேவநல்லூர் பேரூர் கழக செயலாளர் ரூபி ஆ.பாலசுப்பிர மணியன், சிவகிரி பேரூர் கழக செயலாளர் வி.எஸ்.ஜி. சேது சுப்பிரமணியன் ஆகியோர் முன்னிலை வைக்கின்றனர். மாவட்ட சுற்றுச் சூழல் அணி துணை அமைப்பாளர் ஆர். கார்த்திக் வரவேற்புரையாற்றுகிறார் மாவட்ட பிரதிநிதி டாக்டர் ஜி.எஸ்.எஸ்.நல்லசிவன் தொகுப்புரை வழங்குகிறார்.

தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா ஈஸ்வரன் எம்.எல்.ஏ, தென்காசி பாராளுமன்ற உறுப்பினர் ராணி ஸ்ரீ குமார், மாநில மகளிர் அணி செயலாளர் ஹெலன் டேவிட்சன், சட்டமன்ற உறுப்பினர்கள் தி.சதன் திருமலைக்குமார் , எஸ். தங்கப்பாண்டியன், முன்னாள் அமைச்சர் ச.தங்கவேலு, முன்னாள் சட்டப் பேரவை உறுப்பினர் வி.பி. ராஜன மாநில வர்த்தகர் அணி இணைச் செயலாளர் எஸ்.முத்துச் செல்வி, முன்னாள் மாவட்ட செயலாளர் பொ.சிவபத்மநாதன்,

தலைமைச் செயற்குழு உறுப்பினர் மா.செல்லத்துரை, முன்னாள் மாவட்ட செயலாளர் ஆ.துரை, தனுஷ் எம்.குமார், எஸ்.பரமகுரு, எம்.பி.கே.மருதப்பன், இராம.வைரமுத்து, இரா.அருள்ஜோதி பாபா, மாவட்ட கழக நிர்வாகிகள் கோ.சுப்பையா, ஜோ.இராஜதுரை, சு.புனிதா, இல.சரவணன், வி.சந்திர லீலா, எம்.பூங்குடி, பொதுக்குழு உறுப்பினர்கள் க.வேல்ச்சாமி பாண்டியன், எஸ். எம்.சாகுல் ஹமீது, டி. வெள்ளத்துரை, பா.மாரிச்சாமி, பி.மாரி ச்சாமி, ஆர். தேவதாஸ், மு.பராசக்தி, த.மகேஷ்வரி மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர , பேரூர், வட்ட கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் மணமக்களை வாழ்த்துகின்றனர் முடிவில் சிவகிரி 17வது வார்டு கழக செயலாளர் எம்.ரூபன் குமார் நன்றி கூறுகிறார்.

---

### பால் உற்பத்தி – பால்பண்ணை மேம்பாட்டுத் துறையில்

# 450 அலுவலர்களுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சி!

### அமைச்சர் மனோ தங்கராஜ் தலைமையில் நடைபெற்றது!

சென்னை, ஜூலை 6-

தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களில் பால் வழங்கும் உறுப்பினர்களுக்கு எளிதாக கறவை மாட்டுக் கடன் பெற்று வழங்க வழிவகை செய்தல், தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களை பல்வகை சேவை மையங்களாக செயல்படுத்துதல், சுழற்சி பொருளாதாரம் (Waste to Wealth) மற்றும் சிறு பால் பண்ணை அமைப்பதற்குண்டான நிதி ஆதாரங்கள் ஆகியவை குறித்து பால்வளத்துறை அமைச்சர் மனோ தங்கராஜ் தலைமையில் பால் உற்பத்தி மற்றும் பால்பண்ணை மேம்பாட்டுத்துறை மற்றும் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றிய அலுவலர்கள்/ பணியாளர்களுக்கு அவர்களின் பணித்திறனை மேம்படுத்தும் பொருட்டு 01.07.2025 முதல் 04.07.2025 வரை ஒரு நாள் பயிற்சியாக நான்கு குழுக்களுக்கு நான்கு நாட்கள் மாமல்லபுரத்தில் உள்ள தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் கூட்ட அரங்கில் நடத்தப்பட்டது.

தலைமையுரையாற்றிய பால்வளத்துறை அமைச்சர் தமிழ்நாட்டில் அனைத்து பால் உற்பத்தியாளர்களுக்கும் கறவை மாட்டுக் கடன் பெற்றுத் தர வங்கியுடன் இணைந்து பணியாற்றவும், பால் கூட்டுறவு சங்கங்களை பல் வகை சேவையுடன் நிலைத்த வளர்ச்சியுடன் கூடிய சங்கங்களாக மாற்றிட வேண்டும் என அறிவுறுத்தினார்கள். மேலும், பால் உற்பத்தியாளர்களுக்கு அவர்கள் வழங்கிய பாலின் தரத்திற்கேற்றவாறு விலை வழங்கிட வேண்டும் என்று தெரிவித்து, ஆவின் மூலம் கால்நடைத் தீவனம் வழங்கிட வேண்டும் என்றும், கலப்புத்தீவனம் வழங்கி பால் உற்பத்தியை பெருக்கிட வேண்டும் என்றும் தெரிவித்தார்கள்.

இப்பயிற்சி வகுப்பில் ஆவின் பால் உப பொருட்கள், பால் பரிசோதனை கருவிகள் காட்சிபடுத்தப்பட்டது. தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களில் பால் வழங்கும் உறுப்பினர்களுக்கு கறவை மாட்டுக்கடன் பெற்று வழங்கும் வழிமுறைகள், தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களை பல்வகை சேவை மையங்களாக மாற்றி அச்சங்கங்களை இலாபகரமாக செயல்படவைப்பது, சுழற்சி பொருளாதாரம் (Waste to Wealth) மற்றும் சிறு பால் பண்ணை அமைப்பதற்குண்டான நிதி ஆதாரங்கள் குறித்து விரிவாக பயிற்சி வழங்கப்பட்டது. இப்பயிற்சியில் 450 பணியாளர்கள் கலந்து கொண்டு பயிற்சி பெற்றனர்.

இப்பயிற்சியின் விளைவாக அனைத்து பால் உற்பத்தியாளர்களுக்கும் கறவைக்கடன் பெற்று வழங்குதல், அனைத்து சங்கங்களையும் இலாபகரமாக செயல்படவைத்தல், செயலற்ற சங்கங்களை புதுப்பித்தல், பால் கூட்டுறவு சங்கங்களை பல்நோக்கு சேவை மையங்களாக மாற்றி இலாபகரமாக செயல்படவைத்தல், இளைஞர்களை பால் உற்பத்தி தொழிலுக்கு ஈர்த்தல், சங்கங்கள் இல்லாத பகுதிகளில் புதிய பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களை ஏற்படுத்துதல், வறட்சிகாலத்தில் எவ்வித தட்டுப்பாடுமின்றி கால்நடைத் தீவனம் கிடைப்பதை உறுதி செய்தல், ஆவின் பால் உப பொருட்கள் விற்பனையை அதிகரித்தல் ஆகிய நடவடிக்கைகள் மூலம் கிராம பொருளாதாரத்தை உயர்த்தி பால் உற்பத்தியாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த செயல்திட்டம் வகுக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் கால்நடை பராமரிப்பு, பால் வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை அரசு செயலாளர் மருத்துவர் ந.சுப்பையன் மற்றும் பால் உற்பத்தி மற்றும் பால்பண்ணை மேம்பாட்டுத் துறை ஆணையர் ஆ.அண்ணாதுரை ஆகியோர் சிறப்புரை வழங்கினார்கள்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கே.கே. பலராமன்

**ஜூலை 6 (2015)**



திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு ஒன்றியச் செயலாளராக நான்கு முறையும், பொதுக்குழு உறுப்பினராகவும், மாவட்டப் பொருளாளராகவும், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளராகவும் பொறுப்பேற்று கழகப் பணியாற்றியவர்.

கொருக்காத்தூர் ஊராட்சி மன்றத் தலைவராக நான்கு முறையும், செய்யாறு ஒன்றிய துணைத் தலைவராகவும், மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினராகவும், ஒன்றியக்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்து அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

---

## தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி

# மாவட்ட,மாவட்ட துணை மற்றும் தொகுதி நிர்வாகிகள் நியமனம்!

### தகவல் தொழில்நுட்ப அணி செயலாளர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா அறிவிப்பு!

தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி மாவட்ட, மாவட்ட துணை மற்றும் தொகுதி நிர்வாகிகள் பின்வருமாறு அறிவிக்கப்படுகிறார்கள். ஏற்கனவே அறிவிக்கப்பட்ட மாவட்ட நிர்வாகிகள் இவர்களுடன் இணைந்து செயல்படுவார்கள்.

**கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம்**

கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி மாவட்ட ஒருங்கிணைப்பாளராக நியமிக்கப்பட்ட மு.சதிஸ் அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக **ஐ.குமரி மணிமாறன்** அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட துணை தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக குளச்சல் தொகுதி (களப்பணி) நியமிக்கப்பட்ட ரெனால்டு சிபின் அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக **ச.வின்ஸ்டார்** அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

குளச்சல் தொகுதி (சமூக வலைதளம்) ஒருங்கிணைப்பாளர் ஆக **ஜெ.கிறிஸ்டின் ஜெனிபர்** அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

**முனைவர் டி.ஆர்.பி.ராஜா**
செயலாளர்
தி.மு.க. தகவல்
தொழில்நுட்ப அணி

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஜி. சுகுமார் சுப்பிரமணியன்

**ஜூலை 6 (2020)**



பேரறிஞர் அண்ணா அவர்களுடன் நெருங்கி பழகிய கெங்காதரனின் மகனான இவர், இளமைக்காலம் முதலே கழகத்தில் இணைந்து பணியாற்றியவர்.

காஞ்சிபுரம் மாவட்டப் பிரதிநிதி – ஒருங்கிணைந்த காஞ்சிபுரம் மாவட்டப் பொருளாளர் – காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட அவைத்தலைவர், பொருளாளர் எனப் பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

தனது குடும்பத்தில் நடைபெற்ற அனைத்து மண விழாக்களையும் சீர்திருத்தத் திருமணமாக முத்தமிழறிஞர் கலைஞர், பேராசிரியர் மற்றும் கழகத் தலைவர் ஆகியோரின் தலைமையில் நடத்தியவர். அத்துடன் தனது குடும்பத்தில் பிறந்த அனைத்து குழந்தைகளுக்கும் தமிழ்ப் பெயரை சூட்டியவர்.

வாலாஜாபாத் ஊராட்சி ஒன்றியக்குழு துணைத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டு, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

2003ஆம் ஆண்டு தேர்தல் நிதி திரட்டும் பணியில் காஞ்சிபுரம் மாவட்டம் தமிழ்நாட்டிலேயே முதல் மாவட்டமாக ஒரு கோடி ரூபாய் நிதியை வழங்கியதில் மாவட்டச் செயலாளருடன் இணைந்து மாவட்டப் பொருளாளராக பணியாற்றி பாராட்டைப் பெற்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**